<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**MCOP.No:87/2025** நாள் 23.02.2026

ம.சா.1, திருமதி.பழனியம்மாள்

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வாகன விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய வாகன ஓட்டுநருக்கு எதிராக பதியப்பட்ட குற்ற வழக்கில் நான் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியாக இருந்து சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி சிவகாசி குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2 நீதிமன்றத்தில் மேற்படி குற்ற வழக்கு விசாரணையில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதில் தீர்ப்பு வந்தால் தான் விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு என்பது தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது விவசாய கூலி வேலை பார்க்கிறேன். என்னுடைய மகள்களான 2, 3 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர்கள் அவர்களது குடும்பத்தாரோடு வசித்து வருகிறார்கள். 4ம் மனுதாரர் தற்போது நீட் வகுப்பில் படிக்கிறார். என் கணவர் கட்டிடங்களுக்கு பெயின்டிங் செய்யும் கான்ட்ராக்ட் எடுத்து தொழில் செய்து வந்தார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. எனவே என் கணவருக்கு மாதம் ரூ.35,000/–ம் வருமானம் என்று நான் மனுவிற்காக வேண்டி தவறாக சொல்லியுள்ளேன் என்றால் அது சரியல்ல. என் கணவர் பெயின்டிங் கான்ட்ராக்ட் எடுத்து தொழில் செய்யவில்லை என்றும் அவர் பெயின்டிங் கூலி வேலை தான் செய்து வந்தார் என்றும் அதிலும் அவருக்கு 4, 5 நாட்களுக்கு வேலை இருக்காது என்றால் அது சரியல்ல. பெயின்டிங் தொழில் என்பதால் மழை காலத்தில் பெயின்டிங் வேலை நடக்காது என்றால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ.12, மற்றும் மசாஆ.13 ஆவணப்படிக்கு என் கணவர் அந்த நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்றால் அப்படியில்லை. மேற்படி நிறுவனத்தை விசாரித்தால் என் கணவர் அந்த நிறுவனத்தில் வேலைபார்த்தாரா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு PA Coverage பாலிசி தொகையாக ரூ.15 லட்சம் தான் கிடைக்க பெறும் என்றும் மேற்படி தொகையை நாங்கள பெற்றுக்கொள்ள சம்மதமா என்று கேட்டால் அப்படியில்லை. நாங்கள் PA Coverage பாலிசி தொகையாக

ரூ.15 லட்சத்தை பெற்றுக்கொண்டதால் எங்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் விபத்து இழப்பீடு தொகை செலுத்த வேண்டியதில்லை. என்று சொன்னால் அது சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றும் அவைகள் எங்களுக்கு கிடைக்க பெறாது என்று சொன்னால் அதுசரியல்ல. நாங்கள் மொத்த நஷ்ட ஈடும் மிக அதிகமாக கேட்டுள்ளோம் என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rdday of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.